DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

STC No.187/2020

Deposition of Witness for – Prosecution :PW1
Defence :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாபு | ஜாதி | : | |
| த/பெ | : | ஜெயராமன் | மதம் | : | |
| கிராமம் | : | முகப்பேர் | தொழில் | : | வியாபாரம் |
| வட்டம் | : | சென்னை | வயது | : | 57/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி - 30.07.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி: PW1**

**1.** 4 வது காரான பென்ஸ் காரின் கொள்முதல் விலை ரூ.7,50,000/- அந்த காரை Sun Auto car நிறுவனத்திற்கு Vignesh & Co நிறுவனத்திற்கு பணம் கொடுத்து கொள்முதல் செய்யப்பட்டது என்றால் எதிரி சொன்னதின் பேரில் பணம் அனுப்பினேன். எதிரி சொல்லி தான் செய்ததற்கு ஆவணப்பூர்வமாக ஆதாரம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மற்ற 3 கார்களையும் Vignesh & Co நிறுவனத்தின் பேரில் அந்தந்த காரின் உரிமையாளர்களுக்கு பணம் அனுப்பப்பட்டது என்றால் எதிரி சொன்னதின் பேரில் பணம் அனுப்பினேன். எதிரி சொல்லி தான் செய்ததற்கு ஆவணப்பூர்வமாக ஆதாரம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அனைத்து கார்களின் கொள்முதல் பணம் Vignesh & Co நிறுவனத்தில் இருந்து தான் வாங்கப்பட்டது என் தனிப்பட்ட கணக்கில் இருந்து வாங்கவில்லை என்றால் சரிதான். 1 முதல் 4 வரையான கார்களின் தொகை தான் வழக்கு காசோலையில் காணப்பட்டுள்ள தொகை என்றால் சரிதான். கிரடிட் லிமிட் வங்கியில் உயர்த்துவதற்காக மேற்படி தொகையை வங்கியில் செலுத்தினேன் என்றால் சரியல்ல. பணத்திற்காக வங்கிக்கு சென்றேன் ஆனால் பணம் வாங்கவில்லை. ஆகஸ்ட் 2019 ல் பணத்திற்காக வங்கிக்கு சென்றேன் என்றால்

சரிதான். செப்டம்பர் 2019 ல் தான் எதிரியிடம் இருந்து 4 காருக்கான காசோலை பெற்றறேன் என்றால் சரிதான். காசோலையில் புகார்தாரரின் பெயர், தொகை, கையொப்பம் எதிரியிடம் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

2. செப்டம்பர் மாதம் எதிரியிடம் காசோலை வாங்கிய போது கார்கள் விற்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கார்கள் அங்கு இல்லை. எதன் அடிப்படையில் எதிரியிடம் வழக்கின் காசோலைகள் வாங்கப்பட்டது என்றால் டிசம்பர் மாதத்திற்குள் கார்களுக்கான பணம் தரவில்லை என்றால் 4 காசோலைகள் வங்கியில் செலுத்துமாறு தெரிவித்திருந்தார். முதலில் இந்த காசோலை செலுத்துமாறு கேட்டுக்கொண்டார் பின்பு பாக்கி காருக்குண்டான பணம் தருவதாக எதிரி கேட்டுக்கொண்டார். எங்களிடையே போடப்பட்ட ஒப்பந்தத்தில் பணத்திற்கு காசோலை தர வேண்டும் சரத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். 4 காசோலைகளை எதிரியிடம் இருந்து எதிரிக்கு கொடுத்த அழுத்தத்தின் பேரில் தான் அவரிடம் இருந்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. காசோலைகளில் உள்ள தேதிகளை நான் தான் எழுதினேன். எதிரி சொன்னதின் பேரில் தேதிகளை எழுதினேன். எதன் மூலம் எதிரி தேதிகளை தெரிவித்தார் என்று இவ்வழக்கில் புகார் மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். எந்த தேதி வரை கார்கள் விற்பனை ஆகவில்லை என்று வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவித்துள்ளேனா என்றால் தேதி குறிப்பிடவில்லை. தற்போது சாட்சி 24.02.2020 வழக்கறிஞரிடம் கூறியதாக தெரிவிக்கிறார். 4 காசோலைகளில் 24.12.2019, 26.12.2019, 30.12.2019 ஆகிய தேதிகளில் 3 காசோலைகள் மட்டும் Drawer Signature not as per mandate என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு காசோலை மட்டும் 27.12.2019 அன்று போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Digitally signed by
Tmt.K.Mahasakthi.B.B.A.,L.L.B.,(Hons)